உ

7093

# இந்திய மான்மியம்.

DANAMAROPASHYATA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

பிரஹ்மஸ்ரீ கவிகுஞ்சரதாஸ

N. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள், B.A.,

(சென்னை - ஹைகோர்ட்டு டிரான்ஸ்லேட்டர்)

இயற்றியது

7093

Madras:

PRINTED AT M. V. PRESS

1914.

[Copyright Registered]

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41



# இந்தியமான்மியம்.

## விநாயகர் வணக்கம்.

மாமதுரைப் பொற்று மறைக்கரைவி நாயகனன்
றாமதுரை பேசுக்க நன்மைதரும—மாமதுர
வாசகத்தா லிந்தியா மாநாட்டுடதன்மகிமை
தாசனுரை பேசவருள் தா.

---

## இராகம்-கௌமனோஹரி - ரூபகதாளம்.

(இந்தியாவின் ஸ்தானம்.)

கந்துங்கடல் சூழும்வைய - கத்தினைமேல் நாட்டார்
கருதியேஜகத்தை வகுத்த - கண்டங்களில் சிரேஷ்ட
முற்றிடும்ஆசியாவெனும்பே ருற்றகண்டம் அதிலே
உள்ளசிமோர் யாதுருக்கி - ஓங்கியதின மதிலே
சுற்றியசீனாடகுடக்கில் - அன்னாபித தானம்
கொல்பார சீகமொடு - சூழ்பருமர் தானம்
சித்தமினிப் புறஉயர்த்தி - பேசுதுமுத லான
தேயங்கட்குத திலகமெனத் - திகழ்வதிந்தியா நாடே. (2)

(இந்தியமாதின் அங்கங்கள்.)

கூந்தலென மேகமென்றும் - குலவிமயம் சிரமே
குளிர்நமிரு புறக்கடலில் - குவிமுகில்கள் கரமே
வேந்தர்பிரதி நிதியுறையும் - மேனிலமா னமே
மேற்றிசைகீழ்த் திசைமலைகள் - விளங்குபெருந்தனமே
மாந்துகங்கை யோடுஸிந்து - வளநாடும் உரமே
மத்தியமா காணமென்னு - மாநாடு தரமே
காந்தெழிற்பம் பாய்சென்னை கழலொடிரு
காரிகையிந் த்யாவெனுநம் - கண்மணிக்குத் தானே. (3)

# இந்தியமான்மியம்

(இந்தியமாதின் அலங்காரம்)

வங்காளப் பட்டுடுத்தி - வளைந்தநெடுந் தரங்க
வாருதிமே கலையிறுக்கி - மண்கோலார்ச் சுரங்க
சிங்காரத் தங்கமதில் - வங்காளக் கடலும்
திகழெழுமா நதிகளுமேல் - திசை அரபிக் கடலும்
நன்காக அளித்தநவ - ரத்நமணி இழைத்த
நற்பணிபூண் டுயர்மன்னர் - பொற்றுறையில் தழைத்த
துங்கார முத்துவடச் - சோபிதத்தால் இருளோத
தாரந்தில முழுவதிலும் - சிறந்ததிந்த்யா நாடே. (4)

(இந்தியாவின் பொதுச்சிறப்பு.)

விண்ணுறைதே வருமுறைய - விரும்புநிறை நாடு
வேணிலக லாதுதென்றல் - விருந்தளிக்கும் நாடு
கண்ணகல்பூ மாதிருகண் - எனத்தகுந்த நாடு
கடல்முரசம் புறமுழங்கில் சர்ச்சனைசெய் நாடு
எண்ணியமுக் கோணசக்தி மணிவிளங்கும் நாடு
இமயமுதல் குமரிவரை எல்லைகொண்ட நாடு
புண்ணியநா டென்போக பூமியென்னும் நாடு
பூமகள்வீற் றிருக்குமலர்ப் பொன்னுமிந்த்யா நாடே. (5)

(இந்தியாவின் இயற்கை.)

வானிலவு சற்பசமா - பனிமலைமே லுலவும்
வளர்சமுத்தி ரமெனவா - னலெல்லாம் குலவும்
காணிலது கழைகமுகு - தாமெனவே செழிக்கும்
கருப்பமெனநெற் கதிர்வயலில் - சாலிகளும் கொழிக்கும்
ஊனிலகு உயிர்தரிக்கக் - குரியபண்டம் யாவும்
உறுபோகந் தனக்குரிய - சுயாதிபோருளு மேவும்
ஆனிலுயர் தேனுவென - ஆதியெல்லாம் அளிக்கும்
அன்புருவ மானவிந்த்யா - எனப்புகழும் நாடே. (6)

எரிக்குளிகா கொடியருணத் - தினரிடர்செய் தாலும்
சரமக லாதபெரி-மாரிதரு போதும்
தரிக்கவொண்ணுக் கோடையினில் - குளிர்ந்துயிர்கள் நலியும்
ததியிலுந் தண்ணீத்தமுறத் - தானம்பல பொலியும்
பருத்தமத யானையின்வெண் - மருப்பொடகில் தேக்கும்
பறித்துருட்டி நதிமருதப் - பணையமுனிற் சேர்க்கும்
கருத்தமுகில் முழவொலிக்கக் - கண்டுமயில் நடிக்கக்
கானக்குயில் செய்யுமிந்த்யா - வானதுகம் நாடே. (7)

7093.

கருங்குவளை மேய்ந்தெருமை - கன்றுள்ளிச் சொரியும்
கனபாலுண் டுயர்வாளை - கதலியினிற் பரியும்
பருங்கதலிக் குலைமாவின் - பைங்கனியிற் சாயும்
பணைத்தவம் மாங்கனியும்பல - வின்கனியில் தோயும்
அருங்கொம்பிற் றேனருந்தி - அத்தேனின் அடைக்கொம்
படிகொம்பாய் மாதுளைச்செங் - கனிபந்தாய்ப் படிக்கும்
மருங்கிற்பள்ளிப் பிள்ளைகள்போல் - வானரம்பந் தடிக்கும்
மாவளமிந் தியாவளம்வர் - ணனையினா லன்றே. (8)

வேறு.

இராகம்-எதுகுலகாம்போதி-சாபுத்தாளம்.

(இந்தியமலைகள்.)

மாதாசியுமை பிறந்ததன்சவ மாமகமேனைப பெற்றவிமாசல
மால்வரைக்குத தமிழ்முனியோடுதண் மந்தமாருதம்வாழ்பொதிக்குமிடை
போதரிக்கண் மடந்தையர்கூந்தலைப் போலுமேகமு நாகமும் வாழ்விந்தப்
பொருப்புநீல கிரியுமகிழ்வொடு பூவைவண்ணன் உறைதிருவேங்கடப்
பூதரமும் பழமுதிர்சோலையும் பொற்புறும்பழனிக் குலவெற்பும்வான்
புல்லுங் கொல்லிமலையுங் கொடுங்குன்றும் பூவிளைடன்று வானையளந்த
சீதான்றனை மாணுங்குற்றாலச்சி லம்பொடின்னும்பல் திக்கயமொத்த
திண்சயிலங்கள் மன்னிச்செறிந்து திகழ்வதிந்தியா வென்னும்நாடே.

(இந்தியநதிகள்.)

காமமாமதி தங்குங்கயிலைக் கடவுள்வார்சடை தன்னிலொடுங்கி
கரக்காயானற் பகிரதன்வேண்டக் களித்துமாநிலந் தன்னில்வந்துற்றே
ஏமமார்கங்கை சிந்துஸரஸ்வதி யமுனைமாநதியுங் குடைந்தாடும்
ஏழைமார்கள் தம்நீள்குழற்குற்ற இயற்கைமாமண மோடவர்சூடும்
தாமமார்புனிதப் பெருவெள்ளக்கோ தாவிரிகிருஷ்ணை நருமதைபெண்ணையும்
தரங்கமாரும்பூங் காவிரிவைகை சமதமாதிய ராடவிரும்பும்
சேமமார்தரும் நீத்தமருமல் திகழுந்தாமரவர் நியோடின்னும்பல்
திதிக்குந்தீபபுன லாறுகளார்ந்து செழிப்பதிந்தியா வென்னும்நம்நாடே.

வேறு.

இராகம் - கமாசு - சாப்புத்தாளம்

(இந்தியநகரங்களின் பொதுசிறப்பு.)

ஆழிபோலகழியும் விசும்பார்ந்த அணிகொள் மாமதில்களும் புறஞ்சூழ்ந்த
ஏழுமாழுகி லுடலினைக்கீறி எழுந்துவிண்ணுலவிய நெடுங்கொடிய
மாழைமான்விழியார்கள் தம்முகமு மதியும வேற்றுமை யின்றியேதெரியும்
சூழுமாளிகை யிருபுறம் நெருங்கித் துன்னிலா நெடுங் கோபுரவீதி. (11)

அநந்தமார்ந்தன வார்ந்தன மறையோ ரக்ரகாரங்க ளரசர்தங்கோயில்
அநந்தமார்ந்தன வார்ந்தனவணிக ரணிகொள்வீதி வேறினத் தவர்தெருவும்
அநந்தமார்ந்தன வாவணங்களநந்த வாலயங்களு மடாரங்குகளும்
அநந்தமார்ந்தன வார்ந்தனகல்விச் சாலையோடு நாவலர்கழகமுமே. (12)

குட்டிமங்கள் குளிர்நதிவாணம் குலவுசாலைகள் சோலையுய்யானம்
பட்டிமண்டபம் பன்மலர்த்தடங்கள் பதுமையாரும் நீராழிமண்டபங்கள்
தட்டில்லாதன்ன மளித்திடுஞ்சாலை தனைநிறைந்திடும் பொக்கிஷசாலை
பட்டமார்ந்தல் யானையின்கூடம் பரியினமாதிக ளார்ந்திடுங்கூடம். (13)

அரியகாட்சிய பொருளுளசாலை அடவிமாமிருக மடைபடுசாலை ய்சாலை
பெரியநோய்க்குங் கண்ணுக்குமொர்நோய்க்குமே பிரீதியோடுஞ்சிகிச்சைசெ
திருமனுய்க்கர் மால்தாஜ்மாலெனய சிற்பநூற்றிறமை தெரித்திடுமாலும்
பெரியஞாயஸ் தலங்களோடின்னும்பிறவிடங் களுமமைந்தன நகரே (14)

வேறு.

(இராகம் - எதுகுலகாம்போதி - அதிசாளம்.)

(கல்கத்தா)

அம்பா மலர்த்தலைபுலவினில்மிக் - கணிமாநகராய் உயரியமா
  அரண்மனையெனுமா ளிகைகளோடு - விரவியிலகுதி ரிணைத்தசைய
செம்பாமணிவெங் கதிர்காட்டும் - திகழினக்குகள தண் கதிர்காட்ட
  சிறந்த துறைமுக மாயிலகிக் - செனப்பெருக்கமிகுந்ததனப்பெருக்கும்
கைம்மாத்தொழிலுமபிருத்தியால - காரணமாணிய மாநகரும
  கடுகியநதியாகிய ஊக்ளிக-கரையினிலுறைவையபவமும்பெருமம்
செய்ம்மாவுடாகை ராஜியகா - வெப்பூரவியபூர் வெறானாமம
  சேர்ந்தயரனகா புரியைநகை - செயயுங்கல் கத்தாநகரே. (15)

காசி.

ஆயிரமாமுக மோடிமய அரியபெரிய வரையினிற் றோன்றி
  அமிதமகிமையொடு மிதருஷியுட - அழுமையானமும் வெண்ணிறமும்
மாயிருஞாலத் தனிலதன்னை - மனத்தாலொருக்கா னினைத்திடினு
  மதியுடையோருந நீண்டிடலட - மதியிலசே தனருமன்செட்
பாயிருட்பாவந் தன்னையொழித் - தேயவர்க்கொபர நன்மைதரும்
  பண்புளகங்கா நதியுமதில் - படியவருநதிர ளடியவரும்
சேவையுறும்தாளி விசாலாக்ஷி - விச்வேசுர நுலைதயாலயமும்
  வீய்ந்தோர்முக்தி பெறும்பெருவி - சேஷமுமுள காசிநகரே (16

(டில்லிமுதலிய நகரங்கள்)

துங்கத்தினகர குலதிலகர் - தொல்பதியான அயோத்திநகர்
சோதிகொள்லெக்ஷ்மண புரியோடரித் - துவாரமதெனு மாயாபுரியும்
திங்கட்குலதில காதிபரத் - தினபுரியிந் த்ராப்பிரஸ்தநகர்
ஸ்ரீஜயகோகுல பாலர்மகிழ் - இருவடமா மதுராபுரியும்
தங்கத்திருமதி லார்லாகூர் - தற்கால இந்தியராஜ
தானியெனவு மகமதியரா - சாணடபுராதன தலமெனவும்.
செங்கைத்தொழில் மிக்குளதெனவும் - செய்தொழிலமைத்த இடங்கள்பல
திகழ்ந்ததிபெருமையுடைமைத்தெனச் - செப்பிடுமடில் லிமாநகரே. (17)

வேறு.

இராகம்-செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

(பம்பாய் முதலிய நகரங்கள்)

பூரியெனுமஜகந் நாதமோடகிய ரா - புகழுள காஞாமாலய
பொங்குவெண்சலை வைச்சிலை கொடுமுழுதும் - பொருந்திய நகமாலும்
ஆருயராக்ராப்புரி நாகபுரம் - ஆங்கிலர்முதன்முதலாய்
அமர்ந்திட மாகியகூர்த்தமுதில் - அமைபம்பாயெனவே
மேருநிகர் மாடகூடசால - மீனதரைதில் மேவும்
திகரில்துறைமுக மாமொரு தீவினில - திரம்பிதமாகிய தாய்
ஏருயிகந்த்யா மோதகரங்களில - இரண்டாம்நகரெனவே
எண்ணுமபெருமைபுனைமகத்தாளாரான் - கண்ணியமாநகரே. (18)

(மதராஸ் முதலிய நகரங்கள்)

அதிபலமராட்டிர வீரர்கள்முறைப்பு - ஆசுகெசமுதிய தூண
நரஜனாமுறை க்வாலியர்நதுார - அழகுள பாதோடா
மதிபுனைமாயகில் வைகூர - பூனாநகரு-வாணபிரசுதுள பங்களூர
வளமிகுசெய்யுந் சாககாதுகில் - வாமாயுறை கோலார்
நதிகளிரணடுடை அமருட்டூரதன - நகமுறு மைஸரியா
நகரைத்தாபாத நா ஹுவ்முளகள - வாகாவிக்ந திரபாததும்
புதியதாபடித்யா ரூபாறுநகராய் - ஜநதாஜமைமுகமாய்
புதிாலாயகளை சகசக்தினிலமுத - வாம்மத ராஸ்நகரே (19)

வேறு.

இராகம்-கேதாரம்-ஐம்பை தாளம்.

(காஞ்சி.)

நங்கை காமாக்ஷி தங்கி வைமறும் கொம்பர
நாதராலயங் குமரகோட்டமொடு குமுறும்
சுங்குலவுகரவரத பாஜிப உறைகோயில்
தம்மெய் பல கோயில நகரம் மேவை

தங்கமிகு சோழமஹா ராஜன் வீற்றிருந்து
துரைத்தனம் செய்தநகர்மாமலரின் வாஸம்
தங்கிமிகு தேனொழுகு சோலை ஒடுவாவி
தான்சிறந்த நாஞ்சில்சூழ் காஞ்சிமா நகரே. (20)

(தஞ்சை முதலிய நகரங்கள்.)

கூடலூர் கும்பகோண நகரும் நாகை
கொண்டல்தவழ் கோபுரத் தஞ்சைமா நகரும்
பாடலூறு திருச்ரபுர தலமும் கோயம்
பத்தூரொடும் சேலமுந கமண் டலமும்
கேடில் சித்தூரொடு நெல்லூரும் அழகு
கிளர்கஞ்சநகர் பந்தர்விஜய நல்லூரும்
கோடியருந திருவாங்கூர் கொச்சி தூத்துக்
குடி திருநெல்வேலி யெனும்படி புகழும்நகரே. (21)

வேறு.

இராகம் நாதநாமக்கிரியை-ஜம்பைதாளம்.

(தென்மதுரை)

மாமலை யத்வஜராஜ புத்ரி மூன்று
மாதனத்தோடு மவதரிமீன நேத்ரி
சாமளவர்னங் கொளெழில் காத்ரி ஆதி
சம்புவெனும ரஜதகிரியானகயி லாத்ரி. (22)

மாமகிப ரோடு மமர் புரியை நேரில்
வந்தபோதவள் தனங்களிலொன்று மறையத்
தாமவரை மணந்தின்பம் நிறையச் சுந்
தரபாண்டியனெனமகுடம் சூடி இதம் உறைய (23)

பெற்றவரும் அன்பொடாறு பந்து நான்கு
பெருமைத் திருவிளையாடல் உரிமையோடியற்று
நற்றலமதாய் ரெத்ந முத்து நிகரும்
நற்றமிழ் கொழிக்குமகராலயநி கர்த்து. (24)

நலங்குலவு தமிழ்ச்சங்க மோடும் திருமல்
நாய்கர்மால் மூர்த்திதலம் தீர்த்தநல் விசேடம்
இலங்கு தென்மதுரைநக ரோடும்இன்னமும
நேகநகர் சேர்ந்தொளிர் வதிந்தியா நன்னாடே. (25)

## இந்திய மான்மியம்.

வேறு.

**இராகம்-நவரோஸ்-ரூபகதாளம்.**

**(இந்தியமாதின் குணங்கள்.)**

ஸத்தியஞ்சீலந் தருமம் - தயைபொறைவி வேகம்
சாருமதி நேர்மை பெருங் - காரியதீர் வாகம்
அத்தியந்த மாதுர்யதுர் - பக்திவிசு வாஸம்
அரசவிசுவாஸம் அன்பில் - விரவிடுமே நேசம்
சக்திசவுரியவீர்யம் - யுக்தியின்விஸ் தாரம்
ஸாஸமரியாதை பெருந் தன்மையொடு தாபம்
சித்தபரிசுத்தமதி - வித்தையொடு விநயம்
திரிவாக்குமனோ கரணத்துய - தேசவிகுணா மானமே. (26)

வேறு.

விருத்தம்.

ஆஸ்திகர் தார்க்கர் கூட்ட மருமறை யார்ந்த நாடு
ஸோப்திக மறையோ ரொளிரு மதைதரிம் நாடு திவ்ய
க்ஷேத்திர மூர்த்தி தீர்த்தஞ் சிறந்திடு நாடு ஞான
மாதவர் யோகர் வாழ்ந்து மகிழ்ந்திடு மிந்த நாடே (27)

அருமறை நன்கு பாக்கு மரிவீர் தாம் புகழ்ந்த
பரமனை கரிய மாதுவா பரிதிறைக் கெளிய ராகி
அரியபல லீலை செய்த அற்புத சரித்திரம்
வருடத்தில வதாரமாக வளர்ந்தது மந்த நாடே. (28)

அகமமைன மருத்து ஜோதிட வானிலை யோக யாயர்
பங்கயுறை முன்மே யோக வேதாந்த செயதனில்
முதிதுறை மேலையர் சால முடிவிலாக் குறிஞ்சி யென்னும்
தகைமைசால் நிலைகளுன் றுந் தழைத்துள திந்த நாடே. (29)

இனிய செந்தமிழோ டாரியம் ஹிந்துஸ்தானுர்து பார்ஸி
கனிதயத் தெலுங்கு நீற்செறு கன்னட முயர் மராட்டம்
தனிநய மலையாளங் கூர்ச்சரம் பெங்காலி முதல வாய
பனிநயப் பதினெண் பாஷை பயிலுமா மிந்த நாடே. (30)

கற்பனை மணிகொள் ரத்நா கரமெனத் தழைந்த ராம
நற்கதை யாதி காவ்ய நாற்பொருட் கேது வான
பற்பல விதிகா சங்கள் பாரதாதி யம்புராண
சற்சரி தங்களிற்கக் கண்ணியோ ...

வரகவி ராஜசிங்க வால்மீகி வியாசர் மாம
துரகவி காளி தாஸன் சொல்பவ பூதி நற்சீ
கரகவி தண்டி பாணன் கருதக த்தியனோ டுஞ்சித்
திரகவி கீரன் மாக பிலன்திறற் பரணன் மாதோ. (32)

அணுவினைத் துளைத்த கண்ட வெளியினைப் புகட்டி மிக்கக்
குணுகிட வைத்த தென்னக் குறளினை யருளுந் தேவர்
குணமிகு ராம காதை குலவுசெந் தமிழிற் கூறும்
கணுவுடைக் கரும்பின் கட்டிக் கவிச்சக் ரவர்த்தி கம்பர். (33)

மெய்ப்புக ழேந்தி யௌவை மிகுதமிழ் வேத மென்னச்
செப்பிடு மாறிரண்டு திருமுறைத் திருவாய்ச் செந்தேன்
ஒப்பிலா மொழி பகர்ந்த உயர்திரு வாரூ ரான
அற்புதப் புலவர் மன்னி அமருநா டிந்து நாடே. (34)

வேறு.

இராகம்-மோகனம்.

(இந்தியசரித்திரம்)

(பழைய இந்தியராஜாங்கங்கள்)

இத்தகைய பெருமையுள இந்தியநா டாதியினி லெழிலா ரங்கம்
உத்தமவங் கம்கலிங்கம் காஸ்மீர மகதந்தனி குருயபாஞ் சாலம
மெத்தவுயர் நேபாளங் கோசலமே கயமொடவி ராடம் மச்சம்
தத்துபுனல் வங்காளம் ஸிந்துகாம் போஜங்கூர்ச் சரம ராடம். (35)

குடகொடுகொங் கணந்தெலுங்கங் கன்னடங்கர் நாடகம்மற் கொல்லஞ்சீர்த்தூர
விடம்மிடதனு சாலவங்கே ரளம்பாண்டி நாடெனும்பல் மேன்மை வாய்ந்த
இடங்கொள்தனிச் சிற்றரசு நாடுபல சேர்ந்தபெருந் திருநா டாகி
அடர்பெருமே வுலகினும்போய் நிறைந்துததும் பியகீர்த்தி யான ராமால் (36)

பருதிமா மதிமரபின் குலவிளங்க வந்தமனு பகீரதனா வாகு
விருதுதிரி சங்கரிச்சந் திரனதிகன் சகரன்வலி மிகுந்தி லீபன
கருத்துபகி ரதன்ககுத்த னிரகுசிபி அப்பரிட னயன்பொன் மாத
சரதனிரா மன்புரூ ருவன்காதி புருபரதன் தருமனென் போர். (37)

ஆராழி தனிற்றுயிலு மருளாழி நிகரரச ரழகார் வானில்
ஓராழித் தேருடையோ னுலகிருளை யொழிக்குமொளி யுதவல் போற்றஞ்
சீராழி யுருட்டியிட ரிருளகற்றி யருட்செங்கோல் செலுத்தி யாள
நீராழி சூழுலகி னிகரிலா நாடாகி நிலவிற் றன்றே. (38)

(ஆரணிய தேசத்தார் பிரவேசம்)

நில்லாத வாழ்க்கையெனு மெல்லாத பழஞ்சொனிச மாதலாலும்
பொல்லாத காலமென்ப தெல்லார்க்கும் பொதுவாய்ப்போ தருதலாலும்
வில்லாள ராய்ப்பகைவே ரறுத்துமிகு தீரரென விருது பூண்ட
வல்லாள ரானமுன்சொல் லரசர்விதம் புறவவாயின வந்த மன்னர். (39)

வலிகுன்ற வானின்ற மிருளவென்ற செங்கதிர்மா மகிபன் றனை
மெலிவொன்றிமேல்கட லின்மறைதலும்பின் ஞெளிமழுங்கிவிண்மீனெல்லாம்
மலிவொன்றித் தனிநின்று மினிர்கின்ற சுதியிலிருள் வருவதேபோல்
புலியொன்று சிறுதுறையர் தலைநின்ற பொழுதயலார் புகுந்தா ரன்றே. (40)

விஸ்தார மானநம திந்தியா நாட்டினிந்த விதம யல்லே
யத்தாக ளானவிட நிகாசித்தியர் பாரசிகர் யவனர் மாம
தந்தாரு மகமதியர் புகவொன்று சேர்ந்தவரைத் தடுத்தி டாது
மத்தாருந் தயிரெனப்போ ரினிதுழைந்து சிதறினர்நம் மன்னர் தாமே (41)

போரின்மா வரசரெலாந் தனித்தனியே தோற்றுடைந்து போக நாடும்
ஆருமா தரிப்போரற் றெடுப்பார்கைப் பிள்ளையைப்போ லாக வந்து
சாருமா மகமதியர் தலைவராங் கஜினிமா மகம தோடும்
கோரிமா மசமகா தியமகம தியாநாட்டைக் கொண்டா ரன்றே. (42)

(மகமதிய அரசர்.)

அடுத்தடுத்த டிப்ப ன்னிரண்டு தரம்நாட்டிற் புகுந்ததே வாலயங்கள்
இடித்தவனில் திரவியங்கொண் டேகினன் கஜனிமா மகம தென்போன்
குடிப்புகுந்து நாட்டிலா சாண்டவொரு மகமதியன் கொடுமை யாற்கான்
கடிப்பதுங்கு குடிகடமை கலைவெட்டை யாடினனக் கலமி லோனே. (43)

கப்பமத கஜிறனைய மகமதிய ரசியற்றுங் காலத் தந்தக்
குப்பசன னுக்கனைக் கொடுமையினில் வென்றகுடி கேடன் தைமூர்
என்பவனும்படையொடுதெண்ணிறந்தபேர்களைக்கொன்றிலக்கம்பேரை
வெம்புசிறைப் படுத்தியவர்க் குறைவளிக்கச் சோம்பியுயிர் வீட்டி னானே.(44)

(மோகல் சக்ரவர்த்திகள்)

பின்னமது திருநாட்டைப் பேணிநெடுங் காலமர சாண்ட மோகல்
மன்னவர்கள் தம்முளதி நீதிமா னக்பரெனு நிகரில் வள்ளற்
பின்னவரி லரங்கசீப் மன்னவனுந் தன்மதப்பே ரபிமா னத்தால்
சின்னபின்ன செய்தனனம் முன்னவரி லவன்மதத்திற் சேரார் தம்மை.()

இவர்நாளில் டில்லிமா நகரெலா மொருநாளி லிழுதி செய்த
கவர்நாளின் கதநாக நிகர்நாதர் ஷாவுப் படை யெடுத்து வந்தான்
இவர்போதா தெனமேலை நாட்டவரிற் போர்த்துகே யரும்பிராஞ் சேயர்
[illegible]

### வேறு.

(அங்கிலேயர் பிரவேசம்)

இவ்வகையடித்தபேர்க்கெலாமாளாய்ப்பிடித்தபேர் தமக்கெலாம்பெண்டாய்த்
தெவ்விரு ளடர்ந்தித் தேயமு மெத்தத் தியங்கிடும் பொழுதிலவ் விருளாங்
கவ்வைய தகற்றிக் குடதிசை தயனிற் கருணையின் சந்திரோ தயமொத்
தெவ்வமி லிங்கி லாந்தெனுங் குளிர்மிக் கெழில்குலாந் தீவினி லிருந்து.(47)

சலனவயஞ் சிலைபிற் செய்திடும் பதுமை தானெனும் படிக்கதி தவளங்
குலவிய வுருவு மிலகுநற் பவளக் கொடிபடர்ந் தனையசெங் குஞ்சித்
தலையு நீண்டகன்ற புருவமு முழந்தாள் தடவிய கரங்களு மார்ந்த
நலங்கிளர் வடிவும் நகைமிகக் காட்டா நயத்தொடு சுருங்கிய சொல்லும் (48)

உடலினைப் பொருளை யுயிரினைத் தருமபென் றுன்னியே பிடித்தது சாதித்
திடுந்திற லோடு முண்மையை மனச்சாட் சியினையே கடவுளாக்க நதுந
திடமுஞ்சோம்பின்மையாதியகுணங்கள்திகழ்ந்தவாணிகச்செல்வர்தமமில்
இடமகல் கீழிந் த்யாச்சங்கத் தினரொன் றெழிற்பெயர் பூண்டிந் நல்லோர்.

(கீழிந்தியாக கம்பெனியார்.

இதனொடு கீ.பி. பதினேழா நூற்றாண் டினி லிந் தியாவினை யடைந்து
சதமக னெனுமோ கற்சக்ர வாகதி தன்னனு மதியினுற் சூரத்
ததின்முதன் முதலா யமர்ந்துபின் சன்னஞ் சன்னமாய்ச் சென்னைகல் கத்தா
முதலிய தானங் களிற்பண்ட சாலை முயலுநகம் வாணிபத் தினுக்கே. (50)

(அங்கிலேயர் அபிவிர்த்தியும் அரசாட்சியும்.

கோட்டைகொத்தளங்கள்தம்மொடுமமைத்துக்குடிப்புகுபிராஞ்சினரோடும்
போட்டியாய்ச் சுயமே யாதிப ரோடும் போர்புரிந் தகதமில் பிராஞ்சு
நாட்டவர் தம்மை நலிவித்து ராபர்ட் க்ளைவெனும் வீரன்றன் றீரம்
காட்டி யபிளாஸிச்சண்டையிலமைந் ததகனத்ததோர்வெற்றியால்முதலன்மை.()

அடைந்தது முதலாய்த் தமையடைந் தோரை யதிபராக் கியுமவர் தம்பிற்
அடங்கிடச் செய்தும் மேதிலார் நாட்டை யபித்தவர் தம்மொடு பாகித்
தடைந்துமிவ்வி தநாட்டினிற்பெரும்பாகமடைந்ததைப்போற்றிடவியபித்
திவொன்ஹேஸ்டிங்ஸொடுகரன்வாலிஸ்வெல்ஸ்லிபெண்டிங்டல்ஹௌஸியெனும். ()

ஆள்கையின் றிறம்நன் கமைந்தபே ராற்ற லதிபதித் துரைகள்கூர் மதியாம்
வாள்வலத் தாலுங் கடவுளா கருத்தவ் விதமமைந் திருந்ததி னாலும்
தோள்வலிமிக்கஜுதர்டிப்ஸுல்டான்தொலைவில்சிந்தியாவொடும்ஹோல்கார்
கோள்வயச் சீயத் தோர்முத லான கொண்டலைச் சண்டமா ருதம்போல். ()

சயித்துப்பின் னாட்டிற் பெருங்கொள்ளைக் காரத் தக்கினரோடுபிண் டாரித்
த்யித்தியப் பூண்டை வேரறக் களைந்து தண்ணிழல் பரப்பிய மதியைச்
சயித்ததங் குடைக்கீ ழுத்தரத் திமயா சலமுதல் தென்றிசை மலையன்
வயக்கன்னிக் குமரி வரையிலு மிருமா கடலிடை யமைப்பினில் மன்னும். ()

(ஆங்கிலேயர்செய்த சீர்திருத்தங்களாம் நன்மைகளும்)

இந்தியா வெனுநம் முயிர்நிலைக் கனைய வேர்பெரு நாட்டினை யணைத்து
நந்தலி னியாபல் தலங்களை நாட்டி நாடெங்கும் ரயில்தபால் தந்தி
விந்தையாய்ச் சமைத்துப் பஞ்சம்பாடை வேந்தர்கள் பாடையின் பயிற்சிக்
தந்தமில் சர்வகலாசங்கங் களும்நன் கமைத்தனர்சர்க் காரிவ ரியர்க்கு. (55)

வேலைக ளளித்தும் வாணிப நாட்டில் விருத்தியாய்ப் பரவிடப் பொருட்டு
சாலைகள் கால்வா யெல்லையாய்ச் செய்தார் தமக்குமுன் மரிசண வெரொடும்
பலவாற் குறைபா டுடன்கட்டை யேற லெனுங்கொடு வழக்கங்கள் பலவும்
முலமோ டறுத்துப் பின்விதம் நன்று முயன்றர சியற்றிய யப்பால். (56)

(இராஜியப்பெருங்கலகமும், குயீன்விக்டோரியா ராஜ்யபாரத்தை வகித்ததும்)

நேர்ந்தவிந் தியமா கலகத்தி னிமித்தம் நிலைபிசகி லாததியோர் கவனிப்
பார்ந்திடு கிழப்பி யாபீசத் தெண்ணூற் றைம்பதிற் றெட்டெனு மாண்டில்
ஓர்ந்தநல் லறிவோ டுத்தம குணங்க ளுடைப்பில்மா தவஞ்செய்து தம்மைச்
சார்ந்திடு குயீன்விக் டோரியா வென்னுஞ் சக்ரவர்த் தினிக்கிந்த நாட்டின். ()

(குயீன்ஸ் ப்ராக்ளமேஷன்)

அரசினை யளிக்க அவருநம் மதவா சாரமே கணிர்ப்பிர வேசம்
புரிகிற தில்லை யெனவுந்தா மரசு புரிவதிந் தியர்நன்மைக் கெனவும்
உரைசெயி னமது நகமவர் பலம்நன் குணர்வுநாஞ் செய்கைம்மா றெனவும்
முரசறை வித்த படிமறா நீதி முறைவழா திருசெறு நாட்டை. (58)

([illegible])

தப்பிரதி நிதிப் பண்பிரு முதலோர் தங்களைக் கொண்டர சாண்ட
பின்பதன் படிநமே மூலமிகட் வர்டும் பேணர சியற்றிய பின்னர்
பொன்பொரு வியநன் மேரிபி ரெகுபிப் பூமக டன்னையும் நீடு
மன்புகழ் மடந்தை தன்னைய மணந்த மன்னனைந் தாவது ஜியார்ஜாம் (59)

(ஐந்தாவது ஜியார்ஜ் சக்ரவர்த்தியும், அவர்செய்த நன்மைகளும்.)

மாலர சாட்சி வகித்துமே திகரில் மதிப்ரதி நிதிப்ரபு ஹார்டிங்
சாலவே நன்கு மதித்துமே பின்பு சாற்றிய மொழிப்படி யுயர்வங்
காலையொன் றுய்ச்சேர்த் தாண்டிற்கைம் பதிலக்கங் கனதனங் கொடைக்கர்னன்
போலவிந் தியநாட் டினில்வித்தியா பிவிருத்தியின் பொருட்டீந்தன் குதவி. ()

இப்பெரு நாட்டி னாட்சியில் தக்க இந்தியர்க் குப்பெரும் பாகம்
இப்பொழு தருளி இனிமுழு தருள எழுந்தருள் இரவிபோன் றொளிரும்
அப்பிரபு ஆயுள் சந்ததி செல்வ மளவின்றி யோங்கிட வெனவே
எப்பொழு தினுந்தங் கடவுளை யோக்கி யிருப்பகின் [illegible] (61)

இராகம்—புன்னாகவராளி - சாப்புத்தாளம்.

(இந்தியாவை தெய்வமாகக்கருதி நாம் வழிபடவேண்டுமெனல்)

திருவாழிந்தியாவெனும் நஞ்சுய - தேசப்பெருமையைப்பேசக்கேட்டீர்
குருவாய்மொழியாயின்னுஞ்சொல்வதைக்- கொண்டருள் வீர்நெறிநின்றருள்
உருகாநின்றபேரன்பினேடிந்த - உத்தமபாரதத்தைப்பற்றிநின்றே |வீர்
மருவார்மனமாமலராலதை - வந்தியுமேபதிந்த சிந்தியுமே. (62)

மனமோகனச்சாமளமாமணி - வண்ணன்றன் தேவியைச்கண்ணிணையைக்
தினமோதனம்பாலுடனேசெவிட் - டத்தெவிட்டசதருமவனேயினை
வனமோகனமா மயிலைக்கமை - மாதினையிந்தியாமேதினியைக்
கனமோடும்பன்மேன்மைகள்பொலிவரீர் - கைதொழுதே நிரம்புயுமினே.()

கருமாமணியோடுயர்சேனைவும் - தானைவாலைகேதிகாசம
திருமாவளநாடிந் தியாவெனும் - தேவியை ஆவிபைப்போணுவிடும்
பெருமாகனமுந்தனமுமிங்கு- பெருஞ்சுக்முமா அங்குவருஞ்சுகமுமா
வருமாசற்றுயோசித்துப்பாருங்கா - மாந்தர்களேமதிவேந்தர்களே. (64)

வேறு

இராகம் சேகரசேனம் சாப்புத்தாளம்.

(சுயதேசத்தைத் தாய்போலவும், அதைபாள்வோரைத் தந்தைபோலவும்
நாம் பாவிக்க வணுமெனல்)

சுயதேசம்நந்தாயாச்சே  அதைத
துரைத்தனஞ்செய்வோர்நந்தையா  ரல்லவோ
சுயதேசாபிமானந்தோராடும்  அதன்
துரைத்தனத் தாரக்கன்பு செய்ய  வேணும
பயவேபாசுமதியினிற்  பாலும்
சுரக்கச் சுரக்கக்கறப்பது  போல
நயமாயுமினத்தோடும  நாளா
சுறுதியில் நன்மைகள பெறு  வாமே. (65)

பொறுகதோன் பூலோகமாள்வா  னென்ற
பொன்மொழிதனை உங்கள் நன்  மதியில்
பொறுத்தே பதறுதையும் பொறு  பொழு
தொறுகனவிலென்ன விடுத  திடுமோ
இறுக்கே புழுவினுக்குக் குளவியுந்  தன்
உருத்தரல் போனம்மைத் துரைத்  தனத்தார்
ஒறுத்தாலதுவம் நமது  நன்மைக்
கென்றுணரீர் குணக்குன்ற  வரே (66)

வேறு.

(ஒவ்வொருவரும் தேசத்திற்குப் பாடுபடவேண்டுமெனல்)

எறும்பூரக் கல்லுந்தேயும் பிசகை
எடுப்போனும் தேயத்துக்குழைக்க வேணும்
பெரும்பூகமெனவே தம தொரு
போழ்வயிற்றினை மட்டும்பேணுவதில பன்
வருநாய் நரி கூட்டத்தம தொரு
வயிற்றை வளர்ப்பதினால் அதிலே
பெருமையென்ன காணும்பொது விற்
குழைப்பதேபெருமை யென்றுணர் வீரே. (67)

(இந்தியர் ஒற்றுமைபாராட்டவேண்டுமெனல்)

தலையாயிருந்தாலென்ன அங்கம்
தானுங்காலாயிருந்தாலு மென்ன
தொலையா வயிறானாலென்ன அது
தோளொடு கண்ணையானாலு மென்ன
பலவாயிருந்தாலு மவ்வுறுப்பு நன்
பண்பாகவே ஒன்றுசேர்ந் தூடலாய்
இலையா இவைதாமுந்தமக்குள் ளே
பேதகம் எண்ணலும் பேதமையே. (68)

தாளுக்காளாயிருந்தாலென்ன இருந்
துவராகவேயிருந்தாலு மென்ன
தலைப்பார்ப்பனராகிலென்ன நாம்
தாமுப்பறையருமாகி லென்ன
பலஜாதிகளாறுமே நாமும்
பண்புடனொன்று சேர்ந்திந்திய ராய்
நிலைதான் பெறவிலையா பேதகம்
நினைப்பதும்வீண் பேதமை தானே. (69)

(எல்லாஜனங்களும் கல்வியும் பலதொழில்களும் கற்கவேண்டுமெனல்.)

உப்புமுதல் கற்பூரம் வரைக் குமே
உண்டாகும் நாடு நம்நாடல் லவோ
இப்பூமியைவிட்டயல்தேயத் துக்
கேன்போய்க் குற்றேவல்கள்தான் செய் கிறீர்
மெய்ப்பாக நந்தமக்குக் கல்வி பயில்
வித்து நந்தம்மைக் கைதூக்கி விட
இப்போது சர்க்காரர் கங்கணங் கட்டி
இருக்கிறார் பொருக்கெனவாருங்

காற்றுள்ள போதே தூற்றிக்கொள் ளுங்கள்
கல்விகள் கற்றிடக் கால ரிதே
சாற்று நய்வாழ் நாள்கள் விரு
தாவிலே போனாற்பின் வாராது காண்
போற்றும் பல கைத்தொழில் வித்தை
புதுசு புதுசாகக்கற்றுக் கொண் டே
ஏற்றமடையுங்கள் அகற் றிது
வேறொழி வேறு வழியில்லை யே. (71)

(இந்திய நாட்டின் மகிமை.)

(கீர்த்தனம். இராகம்-தோடி-ஆதிதாளம்.)

பல்லவி.

நமதிந்தியா நாட்டினைப் போலவேறொரு
நாடிந்த மேதினிதனி லில்லையே

அநுபல்லவி.

இமயம் வடக்கில் குடக்கில் அரபிப் புணரி
இந்திரன் திசையில் வங்காளக் குடா உவரி
அமையுந் தெற்கினில் அழகான கன்யா குமரி
ஆகநான் கெல்லையுஞ் சேர்ந்தனைவோரையு மாதரி (நமதிந்தியா)

சரணம்.

உலகைசதிலேதனக்கிணையிலாமலேமிக
உயர்ந்த அணிவரையிமா சலமும் உல
ஓங்குநதிகளில்வி-சேடமகிமையுள்ள
உத்தமநதிகங்கையாறு பலமும் கோதா
அலர்கதிர்மதியுள்ளவரைக் குமில்வுலகினில
அழியாதிருக்கும்புயக்ஷேத்திர நலமும சதா
அருமறையோதிமுத்தீவளர்த்துக்கவினை
அகற்றிடுமுயர் அந்தணர் தலமும முனிவர்
நிலைவரமாயுறையும் நீலகிரி முதலா
மலையும் தென்றலென்றும்வாழ்கின்றபொதியமலை
துலைவில் முப்போகம்விளை - உயர் மருதம் முதலா
நிலமும் தவமுனிவர் - நிறைதண்டக முதலா
நிரைத்தொகுதி யுறுதருவளம் சுகவள
நிலைத்த நெடுவனமொடுமடு நதிகுள
முரைத்தலருமிகு அழகொட திகவள
ஒளிப்ரபை கொளரண்மனைநகர் பலவுள எழில் (நமதிந்தியா)

## வாழ்த்து.

இராகம்—அமீர்கல்யாணி - ஜம்பைதாளம்

வாழ்க அந்தணரிறைவர் - வாழ்க ஆனினங்களென்றும்
வாழ்கமாமறை அருளும் - வானவரோடரனயன்மால்
வாழ்க இந்தியஜனங்கள் - வாழ்க இந்தியமதங்கள்
வாழ்க இந்தியமறைகள் - வாழ்க இந்தியநெறிகள்
வாழ்க இந்தியநடைகள் - வாழ்க இந்தியஉடைகள்
வாழ்க இந்தியர்பாஷை - வாழ்க இந்தியரொருமை
வாழ்க ஆங்கிலமகிபர் - வாழ்கமங்கலஉலகம்
வாழ்க தஞ்சாதாஸன் - வளர்பிறந்தசெந்தமிழே

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR. MADRAS-41